DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.43/2025**
**P.W.7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பால்ராஜ் |
| Father's Name | : | திரு.துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 28 |

(Accused 1 to 10 are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May 2026.

**முதல் விசாரணை**

நான் பில்லுப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பேக்கிரி கடையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் ஒருநாள் மாலையில் சுமார் நாலு, ஐந்து மணியளவில் நானும், எனது கடையின் உரிமையாளர் சத்தியராஜும் இருந்தபோது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், எனது கடையின் உரிமையாளர் சத்தியராஜும் கையொப்பம் செய்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)**

காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது சண்டை நடக்கவில்லை என்று தான் சொன்னேன். என்னையும், எனது கடையின் உரிமையாளரையும் காவல் நிலையம் வரவழைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நிரப்பப்படாத வெற்றுதாளில்

**கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்தன் படி சொன்னேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.43/2025
P.W.8

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வம் |
| Father's Name | : | திரு.முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 49 |

(Accused 1 to 10 are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் குற்றவியல் பிரிவில் வட்டாட்சியராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு மணப்பாறை வட்டாட்சியராக பணியில் இருந்த போது மணப்பாறை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வழக்கின் எதிரிகளுக்கு சாதி குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன். இந்த வழக்கில் எதிரி பாலமுருகன் இந்து பறையன் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், எதிரிகள் கிருஷ்ணமூர்த்தி(எ) கிஷோர், நிவாஸ், மணி, சந்தோஷ், நந்தகோபால், பவித்ரன், பாலாஜி மற்றும் பூவலிங்கம் ஆகியோர்கள் இந்து ஊராளி கவுண்டர் எனப்படும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும், எதிரி திருப்பதி இந்து வீரக்குடி வெள்ளாளர் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் சாதிச் சான்றிதழ் மெய்தன்மைச் சான்று வழங்கினேன். நான் வழங்கிய சாதிச் சான்றிதழ் மெய்தன்மைச் சான்று **அ.த.சா.ஆ.5** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

நான் எதிரிகளுக்கு எதன் அடிப்படையில் சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்கினேன் என்றால் பண்ணப்பட்டி(பகுதி) மற்றும் வி.பெரியப்பட்டி(பகுதி) வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன். மேற்படி வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.